**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**
**அ.வ.எண்.393/2020**

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 21ம் நாள் வாதி தரப்பு சாட்சி வா.சா.1 ன் வாக்குமூலம் விசாரிக்கப்பட்டு 1969ம் ஆண்டின் 10வது சட்ட விதிகளின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்பட்டது.

எனது சாட்சிய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டதுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மகாராஜா | தொழில்: | லேத் ஒர்க் |
| த/பெ: | லேட்.ராமசாமி | சமயம்: | இந்து |
| முகவரி: | வெப்படை | வயது: | 42 |
| தாலுக்கா: | குமாரபாளையம் | மாவட்டம்: | நாமக்கல் |

21.01.2026
**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். நான் எனது முதல் விசாரணைக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள சங்கதிகளை நான் சொல்லி தான் என் வழக்கறிஞர் தயார் செய்தார். இவ்வழக்கில் நான் இன்று தாக்கல் செய்துள்ள கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 23.07.2014 | பிரதிவாதியின் பெயரில் உள்ள பாகப்பாத்திய விடுதலைப் பத்திரம் | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.1 |
| 2 | 16.07.2019 | வாதிகள் பெயரில் உள்ள கிரையப் பத்திரம் | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.2 |
| 3 | 30.01.2003 | தாவா 3வது அயிட்ட சொத்துக்கு மின் இணைப்பு கோரிய மனு சம்பந்தமான அறிவிப்பு கடிதம் | அசல் | வா.சா.ஆ.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | 18.09.2020 | கிராம நிர்வாக அலுவலரின் சான்று | அசல் | வா.சா.ஆ.4 |
| 5 | 18.09.2020 | தாவா சர்வே எண்ணுக்கு உண்டான புல வரைபடம் | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.5 |
| 6 | 18.09.2020 | அடங்கல் | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.6 |

(பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)